முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை : திரு. த. பொன்பிரகாஷ், பி.பி.ஏ.பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை

**G.W.O.P. No. 1/2015**

**(மைனர். அமிர்தவர்ஷினி, வயது 3, பிறந்த தேதி 7.6.2011, நாகயீஸ்வரி 20, தெற்கு முதுகுளத்தூர் ரோடு, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவருக்காக )**

நாகயீஸ்வரி ... மனுதார்
க/பெ. சங்கர்

/எதிர்/

சங்கர்
த/பெ. சந்திரசேகர் .... எதிர்மனுதார்

WEB COPY

இம்மனுவானது 21.4.2015 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஷேக் இப்ராகீம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. பழனிவேல் பாண்டி அவர்கள் ஆஜராகியும், வக்காலத்து மற்றும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரரின் மனு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதத்தை மட்டும் கேட்டு இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

உத்தரவு

மனுதாரரை, இளவர் அமிர்தவர்ஷினி என்பவரின் பாதுகாவலராக நியமிக்க உத்தரவிடக் கோரி Guardian Wards Act Section 7(1) & 9 -ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்

மனுதாரரும், எதிர்மனுதாரரும் ஒருவரையொோருவர் விரும்பி 25.8.2010ம் தேதி திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் வைத்து இருதரப்பு பெற்றோர்களை எதிர்த்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தின் பலனாக 7.6.2011ம் தேதி

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். திருமணத்தின் போது மனுதாரர் கொண்டு சென்ற நகைகளை எதிர்மனுதாரர் விற்கு தான்தோன்றித்தனமாக செலவு செய்துவிட்டார். குழந்தை பிறந்ததும், மனுதாரரின் பெற்றோர்கள் மருத்துவமனையில் வந்து பார்த்து மனுதாரருக்கு வேண்டிய தேவைகளை செய்து கொடுத்தனர். அப்போது எதிர்மனுதாரர் தான் தொழில் தொடங்க வேண்டும் என்று சொல்லி பிரச்சனை செய்தவுடன் மனுதாரரின் தகப்பனார் ரூ.1 லட்சம் கொடுத்து அதைக்கொண்டு எதிர்மனுதாரர் ஸ்ரீ வெற்றிவேலன் எண்டர்பிரைசஸ் சொட்டு நீர்பாசனம் என்ற கம்பெனியை ஆரம்பித்தார். இதற்கிடையில் மனுதாரர் மீண்டும் 2ம் முறையாக கர்ப்பமுற்றதை தெரிந்து அதனை கலைத்து விடும்படி சண்டையிட்டுள்ளார். இந்நிலையில் 3.1.2014ம் தேதி 2 இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. இரண்டு குழந்தைகளை பிறந்த பின்னர் எதிர்மனுதாரரின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறி மனுதாரருக்கோ அவரது பிள்ளைகளுக்கோ எவ்வித பாதுகாப்பும், பராமரிப்பும் செய்யாமல் தான்தோன்றித்தனமாக இருந்து கொண்டு எதிர்மனுதாரரின் வருமானத்தைக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தார். மேலும் மெகர்நிஷா என்ற பெண்ணுடன் கள்ள உறவில் இருந்து கொண்டு மேற்படி மெகர்நிஷாவை 2வது திருமணம் செய்யப் போவதாக சொல்லி வந்துள்ளார். இது விஷயமாக பஞ்சாயத்து நடந்து பஞ்சாயத்தார்கள் எதிர்மனுதாரரை கண்டித்தனர். இரண்டு குழந்தைகளையும் மனுதாரர் வைத்திருந்ததால் 2வது திருமணம் செய்ய முடியாது என்று சொல்லி 2வது குழந்தையை பறித்துச் சென்றுவிட்டார். குழந்தையை கடத்திச் சென்றது சம்பந்தமாக மனுதாரர் புகார் கொடுத்து விசாரித்தபோது குழந்தையை ஒப்படைப்பதாகச் சொல்லிவிட்டு குழந்தையை ஒப்படைக்க மறுத்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் கைநிறைய சம்பாதித்தும், அதைக்கொண்டு தன் மனைவியான மனுதாரருக்கும், அவரது பிள்ளைகளுக்கும் கொடுக்காமல் தான் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு தான் மட்டும் சுக போக வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் தான்தோன்றித்தனமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவு செய்து கொண்டு தொடர்ந்து கள்ள உறவில் இருந்து வருகிறார். எதிர்மனுதாரரிடம் இளவர் குழந்தை இருந்தால் அக்குழந்தை நல்ல முறையில் வளராது. மேலும் அவரது உடல்நலம்,

WEB COPY

வளர்ச்சி, கல்வி மற்றும் இளவரின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். மனுதாரரே மேற்படி இளவருக்குச்



செய்யவேண்டிய கடமைகளைச் செய்தும், பள்ளியில் படிக்க வைத்தும், அவர்களை பெயர் சொல்லும் அளவிற்கு பெருமைப்படுத்துவார் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. மனுதாரர் இளவரின் நலனில் அதிகமான அக்கறை கொண்டவர் ஆவார். மேற்படி மைனரின் நலனுக்கு விரோதமாக ஒருபோதும் செயல்படமாட்டார். ஆகவே மைனர் குழந்தையான அமிர்தவர்ஷினிக்கு மனுதாரரே பாதுகாவலர் என விளம்புகை செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரரருக்கு தபாலில் அனுப்பிய அறிவிப்பு சார்பாகி எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லாததாலும் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டார். மனுதார் தரப்பில், மனுதார் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 மற்றும் 2 சான்றாவணங்கள் குறியிடப்பட்டன.

WEB COPY

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா அல்லது இல்லையா, என்பதேயாகும்.

<u>5. பிரச்சனை</u>

மனுதாரரை மைனர் அமிர்தவர்ஷினி என்பவருக்கு காப்பாளராக நியமிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ம.சா.1 தன்னுடைய பிரமான வாக்குமூலத்தில், மனுதாரரும், எதிர்மனுதாரரும் ஒருவரையொோருவர் விரும்பி 25.8.2010ம் தேதி திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் வைத்து இருதரப்பு பெற்றோர்களை எதிர்த்து திருமணம் செய்து கொண்டனர் என்றும் திருமணத்தின் பலனாக 7.6.2011ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார் என்றும் திருமணத்தின் போது மனுதாரர் கொண்டு சென்ற நகைகளை எதிர்மனுதாரர் விற்று தான்தோன்றித்தனமாக செலவு செய்துவிட்டார் என்றும் குழந்தை பிறந்ததும், மனுதாரரின் பெற்றோர்கள்

மருத்துவமனையில் வந்து பார்த்து மனுதாரருக்கு வேண்டிய தேவைகளை செய்து கொடுத்தனர் என்றும் அப்போது எதிர்மனுதாரர் தான் தொழில் தொடங்க வேண்டும் என்று சொல்லி பிரச்சனை செய்தவுடன் மனுதாரரின் தகப்பனார் ரூ.1 லட்சம் கொடுத்து அதைக்கொண்டு



எதிர்மனுதாரர் ஸ்ரீ வெற்றிவேலன் எண்டர்பிரைசஸ் சொட்டு நீர்பாசனம் என்ற கம்பெனியை ஆரம்பித்தார். இதற்கிடையில் மனுதாரர் மீண்டும் 2ம் முறையாக கர்ப்பமுற்றதை தெரிந்து அதனை கலைத்து விடும்படி சண்டையிட்டுள்ளார். இந்நிலையில் 3.1.2014ம் தேதி இரண்டாவது பெண் குழந்தை பிறந்ததள்ளது என்பது ம.சா.ஆ.1 பிறப்புச் சான்றிதழிலிருந்து தெரியவருகிறது. இரண்டு குழந்தைகள் பிறந்த பின்னர் எதிர்மனுதாரரின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறி மனுதாரருக்கோ அவரது பிள்ளைகளுக்கோ எவ்வித பாதுகாப்பும், பராமரிப்பும் செய்யாமல் தோன்றித்தனமாக இருந்து கொண்டு எதிர்மனுதாரரின் வருமானத்தைக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தார். மேலும் மெகர்நிஷா என்ற பெண்ணுடன் கள்ள உறவில் இருந்து கொண்டு மேற்படி மெகர்நிஷாவை 2வது திருமணம் செய்யப் போவதாக சொல்லி வந்துள்ளார். இது விஷயமாக பஞ்சாயத்து நடந்து பஞ்சாயத்தார்கள் எதிர்மனுதாரரை கண்டித்தனர். இரண்டு குழந்தைகளையும் மனுதாரர் வைத்திருந்ததால் 2வது திருமணம் செய்ய முடியாது என்று சொல்லி 2வது மைனர் குழந்தையை பறித்துச் சென்றுவிட்டார். குழந்தையை கடத்திச் சென்றது சம்பந்தமாக மனுதாரர் புகார் கொடுத்து விசாரித்தபோது குழந்தையை ஒப்படைப்பதாகச் சொல்லிவிட்டு குழந்தையை ஒப்படைக்க மறுத்து வருகிறார். மேலும் எதிர்மனுதாரர் கைநிறைய சம்பாதித்தும், அதைக்கொண்டு தன் மனைவியான மனுதாரருக்கும், அவரது பிள்ளைகளுக்கும் கொடுக்காமல் தான் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு தான் மட்டும் சுக போக வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் தான்தோன்றித்தனமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவு செய்து கொண்டு தொடர்ந்து கள்ள உறவில் இருந்து வருகிறார். எதிர்மனுதாரரிடம் இளவர் குழந்தை இருந்தால் அக்குழந்தை நல்ல முறையில் வளராது. மேலும் அவரது உடல்நலம், வளர்ச்சி, கல்வி மற்றும் இளவரின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். மனுதாரரே மேற்படி இளவருக்குச் செய்யவேண்டிய

WEB COPY

கடமைகளைச் செய்தும், பள்ளியில் படிக்க வைத்தும், அவர்களை பெயர் சொல்லும் அளவிற்கு பெருமைப்படுத்துவார் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. மனுதாரர் இளவரின் நலனில் அதிகமான அக்கறை கொண்டவர் ஆவார். மேற்படி மைனர்களின் நலனுக்கு விரோதமாக ஒருபோதும் செயல்படமாட்டார். ஆகவே மைனர் குழந்தையான அமிர்தவர்ஷினிக்கு மனுதாரரே

WEB COPY

காப்பாளர் என்று விளம்புகை செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார்.

6. இந்நிலையில், மனுதாரரின் பிரமாண வாக்குமூலம் மற்றும் சான்றாவணத்தை மறுத்து, எதிர்மனுதார் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்து எதிர்கட்சியும் செய்யவில்லை. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லாமல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். எனவே ம.சா.1ன் சாட்சியத்தினை நிராகரிக்க எந்த அம்சமும் இல்லை. மேலும் மனுதார் தனது மனுவில் மனுதார் மேற்படி மைனர் அமிர்தவர்ஷினி நலனில் அக்கறை கொண்டவர் என்றும் மைனரின் நலனுக்கு விரோதமாக ஒருபோதும் செயல்படமாட்டார் என்றும் உறுதியளித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் 3 வயதான பெண் குழந்தையை எதிர்மனுதாரரான அவரது தகப்பனார் எடுத்துச் சென்று வளர்ப்பது மைனர் குழந்தையின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அவரது தாயாரான மனுதாரர் வசம் இளவர் இருப்பது தான் அவர் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, மனுதாரரை இளவர். காப்பாளர் என்று விளம்புகை செய்வது சரியானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

7. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு மைனர் அமிர்தவர்ஷினிக்கு□□□□ மனுதாரரே காப்பாளர் என விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

<u>மனுதார் தரப்பு சாட்சி</u>

1. நாகயீஸ்வரி

<u>மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1, | 15.06.2011 | - | பிறப்புச் சான்றிதழ் சான்றிட்ட புகைப்பட நகல். |
| 2. | - | - | குடும்ப அட்டை சான்றிட்ட புகைப்பட நகல். |

<u>எதிர்மனுதார் தரப்பு சாட்சிமற்றும் சான்றாவணங்கள்</u> ,இல்லை.

மு.மா.நீ.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,

இராமநாதபுரம்

G.W.O.P. No. 1/2015

சீரான/வரைவு உத்தரவு

நாள் 28.4.2015

WEB COPY

**<u>G.W.O.P. No. 1/2015</u>**

**28.4.2015**

**<u>உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.</u>**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மைனர் அமிர்தவர்ஷினிக்கு□□□□ மனுதாரரே காப்பாளர் என விளம்புகைசெய்து உத்தரவிடப்படுகிறது.

WEB COPY

முு.மா.நீ.